DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.III, SALEM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No.**CC.No. 1098 of 2022**

| | | |
|---|---|---|
| | Prosecution | : P.W. 3 |
| Deposition of Witness for | Defence | : |
| | Court | : Judicial Magistrate No.3, Salem. |

| Name | **விஜய்** |
|---|---|
| Father's name | **பரமசிவம்** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th October 2023.

2023ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா.3** வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.E.சந்தோஷ்குமார், பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

துவங்கும் நேரம்: பிற்பகல் 12.50

**எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளுக்காக கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் சேலம் அம்மாபேட்டையில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் டீ மாஸ்டராக வேலை செய்கிறேன். நான் அஸ்தம்பட்டி ரவுண்டானாவில் உள்ள ஐயங்கார் பேக்கரில் டீ மாஸ்டராக உள்ளேன். கடந்த 2022ம் வருடம் 4 வது மாதம் ஒரு நாள் இரவு சுமார் 7.15 மணியளவில் நான் கடையில் டீ போட்டுக்கொண்டிருந்தபோது 2 நபர்கள் இரு சக்கர வாகனத்தில் வந்துகொண்டு இருந்தார்கள். அப்போது போலிசார் அவர்களை பிடித்து விசாரித்தபோது அவர்கள் போதையில் இருந்தார்கள். அது குறித்து போலிசார் அவர்களிடம் கேட்டபோது அவர்கள் போலிசாரை பிடித்து கீழே தள்ளிவிட்டார்கள். மேலும் அவர்கள் மயிறு

என தகாத வார்த்தைகளால் போலிசாரை திட்டினார்கள். அப்போது அந்த போலிஸ் அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக கூறிவிட்டு சென்றார். இது சம்மந்தமாக அஸ்தம்பட்டி போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு அன்யைதினம் இரு சக்கர வாகனத்தில் இரு நபர்களை பார்த்தால் அடையாளம் தெரியாது. ஏனெனில் ஞாபகத்தில் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்தபோது நான் போலிசாரிடம் ஐயங்கார் பேக்கரில் காசாளராக பணிபுரிந்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் இல்லை டீ மாஸ்டராக பணிபுரிகிறேன் என்று கூறியுள்ளேன். ஐயங்கார் பேக்கரில் நான் பணிபுரியும் இடத்திலிருந்து சம்பவம் நடந்ததாகசொல்லப்படுகிற இடத்திற்கும் இடையே 500 அடி தொலைவு இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாகசொல்லப்படுகிற நேரத்தில் இயல்பாக போக்குவரத்து நெரிசல் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் கடையிலும் கூட்டமாகத்தான் இருக்கும். எங்கள் கடையில் நான் பணிபுரியும் இடத்திற்கு முன்புறம் உள்ள சிக்னலில் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தால் மறுபுறம் என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் எந்த சமயத்திலிருந்து நின்றார்கள் என்பதோ யார் யாரை பிடித்தார்கள் என்பதோ அவர்கள் நின்ற சமயத்தில் என்ன நடந்தது என்பது குறித்தோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளை பிடித்ததாக சொல்லப்படுகிற நிலையில் அவர்கள் எத்தனைமணிக்கு அவர்கள் வந்தார்கள் அவர்கள் மது அருந்தியிருந்தார்களா என்பதும், கெட்ட வார்த்தைகள் சொல்லி திட்டினார்களா என்பதும், எப்போது சென்றார்கள் என்பதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கூறியதுபோல சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் போலிசார் கடைக்கு வந்த வகையில் பழக்கம் என்றாலும் அதனால் அவர்கள் போட்ட வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

முடியும் நேரம்: பிற்பகல் 12.59

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th October 2023.

Signature of witness.

Taken down by me in the open Court. Read by the witness/accused to be correct.

Sd/-Tmt.G.Thanga Karthika
Judicial Magistrate No.3, Salem.